
**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|



## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 5 | 11) 3 | 21) 5 | 31) 3 |
| 2) 4 | 12) 1 | 22) 5 | 32) 3 |
| 3) 5 | 13) 4 | 23) 1 | 33) 2 |
| 4) 3 | 14) 3 | 24) 3 | 34) 1 |
| 5) 1 | 15) 5 | 25) 2 | 35) 5 |
| 6) 2 | 16) 1 | 26) 4 | 36) 1 |
| 7) 3 | 17) 2 | 27) 1 | 37) 2 |
| 8) 1 | 18) 5 | 28) 5 | 38) 1 |
| 9) 2 | 19) 2 | 29) 5 | 39) 3 |
| 10) 4 | 20) 4 | 30) 1 | 40) 3 |

## பகுதி A

*01.* **படம் குறித்தல்**

## பகுதி B

*02. 1)* ◆ இலங்கை இந்தியாவுக்கு அருகில் அமைந்திருத்தல்.

◆ இலங்கை இந்தியாவில் இருந்து பிரிந்திருத்தல்.

◆ இலங்கை இந்து சமுத்திரத்தின் கேத்திர நிலையத்தில் ஒரு தீவாக இருத்தல்.

➢ இலங்கையில் பௌதிக உறுப்புக்கள்

- இயற்கைத் துறைமுகங்கள்.
- மத்திய மலைநாடு
- ஆறுகள்
- சமநிலங்கள்

*2)* **வெளியக புவியியல் அமைப்பு**

1. புவியியல் நிலைமை வரலாற்றில் கொண்டுள்ள செல்வாக்கு.
2. இந்தியாவிற்கு அருகாமையில் அமைந்துள்ளமையால் ஏற்பட்ட செல்வாக்கு.
3. இந்தியாவிலிருந்து விலகித் தனித்தீவாக அமைந்துள்ளமை.
4. இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை.

**உள்ளக புவியியல் அமைப்பு**

1. சம நிலங்கள்
    - குடியிருப்புகள் உருவாதலும் பரவுதலும்.
    - வடக்கு, கிழக்குச் சமநிலங்களை மையமாகக் கொண்ட அரசுகள்
2. நதிகளும் வடிநிலங்களும்
    - இலங்கையின், நீர்த்தொகுதி முக்கியத்துவம் பெறல்.

- குடியிருப்புகள் உருவானமையும் விருத்தியுற்றமையும்

  (உ+ம்) மல்வத்துஓயா – அநுராதகாம

  கலா ஓயா – உருவெலகாம

3. மத்திய மலை நாடு
   - பூகோளப் பிரிவிற்கு அடிப்படையாய் அமைந்த இடமாகும்.
   - மலை, வன, நீர் அரண்களால் பாதுகாக்கப்பட்டுள்ளமை.

4. துறைமுகங்கள்
   - தீவைச் சுற்றி அமைந்திருந்த துறைமுகங்கள்.
   - முதலாவது ஆரியக்குடியேற்றங்கள்.

03. 1) அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள்

2) நாட்டை ஒன்றிணைத்தல்.

➢ **உள்நாட்டு வெளிநாட்டு சவால்கள்**

- துட்டகாமினி, வட்டகாமினி ஆகிய அரசர்களின் அரசியல் பின்னணி.
- சவால்களின் ஒற்றுமை, வேற்றுமை
- 44 ஆண்டுகள் ஆட்சி செய்து மக்களின் நன்மதிப்பை பெற்றிருந்த நீதியான ஆட்சியாளனான எல்லாளனுடன் போர் செய்யும் பொருட்படை திரட்டிய போது துட்டகாமினி எதிர்நோக்கிய சவால்கள்
- 14 ஆண்டுகளான குறுகிய காலப்பகுதியில் முக்கியமான ஐந்து தமிழ் அரசர்களுடன் பிரச்சினைகளின் மத்தியில் போர் செய்ய வேண்டிய சவால், படை திரட்டுவதிலும் சவாலை எதிர்கொள்ள வேண்டி இருந்த நிலை.
- இருவரும் இந்திய ஆக்கிரமிப்பினை எதிர்நோக்க வேண்டிய நிலை.
- வட்டகாமினி உள்நாட்டில் எதிர்நோக்கிய பிரச்சினை.
  (உருகுணையைச் சேர்ந்த தீச என்ற பிராமணனின் கலகம்.

➢ **நாட்டை ஒன்றிணைத்தல்**

- துட்டகாமினி போர் செய்வதற்கான பின்னணி சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. (காவந்தீசன் தனது ஆட்சிக்காலத்தில் நாட்டை சீரமைந்திருந்ததோடு, உருகுணைப் பகுதியை ஒன்றிணைந்திருந்தான்)
- வட்டகாமினி இன்னல்களின் மத்தியில் தனிமையாக மறைந்திருந்து படை திரட்ட வேண்டி இருந்தது. நாட்டை ஒன்றிணைத்தலின் பொருட்டு அவனே முன்னின்று செயலாற்ற வேண்டிய நிலைமை ஏற்படல்.
- தனது படையை அணிதிரட்டி, ஆயத்தம் செய்த பின்னர் துட்டகாமினி உருகுணையில் இருந்து அநுராதபுரத்தை ஆக்கிரமித்தான். வழியில் பல இடங்களில் நடைபெற்ற போர்களில் எல்லாளனின் போர் வீரர்கள் தோல்வி கண்டதுடன், அநுராதபுரத்திற்கு வந்து போரினை நடாத்துதல்.
- வட்டகாமினி மலையக ரட்டையில் இருந்து அநுராதபுர யுத்தத்தை வழி நடத்தல்.
- நாட்டை ஒன்றிணைத்தலில் இருவரும் படையினதும் சேனைத் தளபதிகளினதும் ஒத்துழைப்பைப் பெறல்.

04. ● பொலன்னறுவையின் இறுதிக்காலத்தில் பலம் வாய்ந்த மன்னர்கள் தோன்றாமை.

- பராக்கிரமபாகு மன்னனால் கட்டியெழுப்பப்பட்ட நிர்வாகத்தைக் கொண்டு கடுமையான மத்திய மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை நடத்துவதற்காகச் செயற்திறன் மிக்க திறமையான அரசர்கள் தோன்றாமை.
- பராக்கிரமபாகுவினால் உருவாக்கப்பட்ட இராணுவ ரீதியான நிர்வாகக் கட்டமைப்பால் ஏற்பட்ட பாதகமான நிலை.
- மகாபராக்கிரமபாகு மன்னன் நாட்டை ஒன்றுபடுத்துவதற்காக நடத்திய தொடரான யுத்தங்களும், வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளும் பங்களிப்புச் செய்தமை.
- தளபதிகள் பலம் பெறல்.

  (உ+ம்) தாவுங், கித்தி, ஆயுஸ்மந்த, பராக்கிரம போன்ற தளபதிகள் மன்னனை அகற்றி இன்னொருவரை சிம்மாசனத்தில் அமர்த்துதல்.
- வெளிநாட்டு பரம்பரை தொடர்புள்ள ஆட்சியாளர்கள் உருகுணை மக்களால் விரும்பப்பட்டமையால் அடிக்கடி கிளர்ச்சிகள் ஏற்பட்டமை.
- மத்தியாட்சி குழப்பமுற்றமையால் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனமை.
- எதிரிகளின் ஆக்கிரமிப்பால் நீர்ப்பாசனத்திற்கு ஏற்பட்ட அழிவு.
- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு.
- கி.மு. 6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி 13ம் நூற்றாண்டு வரை நிலவிவந்த நீர்வள நாகரீகம் 1215 இல் மாகனின் ஆக்கிரமிப்புடன் வீழ்ச்சியுற்றமை.
- மாகனின் கொடூரமான செயற்பாடுகளால் பொதுமக்களும் பிக்குமாருடன் இராசரட்டையைக் கைவிட்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்லல்.
- மாகனின் கொடூரமான செயற்பாடுகளால் பொது மக்களும், பிக்குமாருடன் இராசரட்டையைக் கைவிட்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்லல்.
- மாகனின் செயற்பாடுகளால் இராசரட்டை பிரதேசம் மக்கள் இல்லாமலாகி காடடைந்து போனமை.
- தொற்று நோய்கள் பரவியமை.
- நீர்ப்பாசனத் தொழினுட்பமும் பௌத்த சமயமும், வீழ்ச்சியுற்றமை.
- உருகுணைப்பிரதேசம் கடுமையாக அடக்கி வைக்கப்பட்டிருந்தமையால் மாகனுக்கு எதிராகப் பலம் வாய்ந்த எதிரிப்படையொன்று அங்கிருந்து ஏற்படாமற் போனமை.
- தலைநகரங்கள் தென் மேற்கிற்கு இடம்பெயர்ந்தமை.

05. **1) தம்பதெனியாக்கால இலக்கியம்**

- ♦ 3ம் விஜயபாகுவின் (1232 - 1236) காலத்தில் தம்பதெனியயுகம் ஆரம்பமாகியது.
- ♦ 3ம் விஜயபாகு, 2ம் பராக்கிரமபாகு ஆகிய மன்னர்களின் காலத்தில் இலக்கியத்துக்கு அரச அனுசரனை கிடைத்தது.
- ♦ இக்காலத்திலிருந்து அறிஞர்களும், நூல்களும்.
- ♦ 1) சங்கரக்பித தேரர்

  2) திம்புலாகல வனவாசி மேதங்கதேரர்.

3) வாசிஸ்சர தேரர் (சச்சசங்கேப சிங்கள சன்யை) (விசித்திமார்க்கசன்யை).

4) 2ம் பராக்கிரமபாகு – விசித்திமார்க்கசன்யை, விருயநன்யை, கவிசிலுமின.

5) தர்மசேனதேரர் - சத்தர்மரத்னாவலிய

6) மயுரபாத பிறிவெனாதிபதி புத்த புத்தரதேரர் பூஜாவலிய, யோகர்ணாவய.

7) பஞ்சமூல பிரிவெனாதிபதி – பேசஜ்ஜ மஞ்ஜீசா

8) வேதேகதேரர் - ரசவாகினி, சமன்தகூட வர்ணனாவ

9) அனோமதிஸ்ஸ தேரர் - தைவக்குனுகாமதேனு, ஹத்ருவகைல்ல விகாரவங்சய

10) வேதேகதேரர் - சிருத்சங்கரால

11) வரைத்ன மேதங்கரதேரர் - பயோகசித்தி

12) மேதங்கர – ஜினசரிதம்

- ஏட்டுச்சுருள் எழுதுதல், கதிகாவத
- தம்பதெனிய யுகத்தில் பாளி இலக்கிய வளர்ச்சிக்கு 2ம் பராக்கிரமபாகு மன்னன் சோழ நாட்டிலிருந்து பிக்குகளை வரவழைத்தான்.

**2) பொலன்னறுவைக்கால கட்டடக்கலை.**

- அநுராதபுர யுகத்தைவிடக்கட்டிட அமைப்பு சிறப்பாக இருந்தமை.
- கலைஞர்கள் பெரும்பாலும் பழைய மரபினைப் பின்பற்றுதல்.
- செங்கற்களின் பாவனை அதிகரித்தல்.
- அரசர்கள் காலக்கட்டிடக் கலையின் இயல்புகள் வெளிப்படுத்தப்படல்.
- தென்னிந்திய இந்துக்கோயில்களின் கட்டிட மரபுகளின் அமைப்பு.
- கட்டிட அமைப்பு அநுராதபுர யுகத்தை விட வேறுபட்ட இயல்பை பெறல்.

**3) நிஸ்ஸங்கமல்ல மன்னன்.**

1. II அம் விஜயபாகு மன்னனின் பின்னர் அவனது இளவரசனாயிருந்த நிஸ்ஸங்கமல்ல மன்னன் அரசனாதல்.
2. 1ம் பராக்கிரமபாகுவின் பின்னர் பொலன்னறுவையின் அரசர்களுள் இவனே சிரேஷ்டமானவனாவான்.
3. சிம்மாசனம் ஏறுகையில் அவன் எதிர்நோக்கிய இடர்பாடுகள்.
4. அவ்விடர்பாடுகளை எதிர்கொண்டு சமாளித்த விதம்.
5. தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்.

   1) புத்த சமயத்திற்கு சலுகைகள் வழங்கியமை.

   2) நாடெங்கும் பயணஞ் செய்தமை.

   3) துலாபாரக் கொடையை வழங்கியமை.

   4) குடிமக்களுக்கு நிவாரணம் வழங்கியமை.

   5) வரிச்சுமையிலிருந்து மக்களை விடுவித்தமை.

**4) வசபன்**

- லம்கர்ண வம்சத்தின் முதல் மன்னன்
- நாடுமுழுவதிலும் அவன் ஆட்சி பரந்திருந்தது.
- வல்லிபுர பொற்சாசனம் இவன் காலத்திற்குரியது.
- நீர்ப்பாசனத்துறையின் மிகப் பெரும் சாதனைகளை நிலைநாட்டினான்.
- லம்பகர்ணன் வம்சம் நான்கு நூற்றாண்டுகள் ஆட்சிபுரிந்தனர்.

## பகுதி C

06. **குறிக்கோள்**

- அதிக இலாபம் உழைத்தல்.
- கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்.
- இலங்கையில் இருந்த பெறுமதியான பொருட்களை பிரித்தானியாவில் விற்பனை செய்தல்.
- நிர்வாகம் போத்துக்கேய அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டது.

**மத்திய நிர்வாகம்**

- போத்துக்கேயரின் கீழைத்தேய மத்திய நிலையம் கோவாவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இலங்கையின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக கப்பித்தான் ஜெனரல் காணப்பட்டார்.
- வரி அதிகாரியாக விதோர்த பெசஞ்ஞா செயற்பட்டார்.
- நீதித்துறை அதிகாரியாக ஒவ்தோர் த பெசஞ்ஞா செயற்பட்டார்.

**மாகாண நிர்வாகம்**

- கோட்டைக்கால நிர்வாக முறை பின்பற்றப்பட்டது – மாத்தறை, ஏழு கோரளை, நாளு கோரளை, சப்பிரகமுவ.
- யாழ்ப்பாணம் சுதேச முறையில் ஆழப்பட்டது.
- திசாவை மார் போர்த்துக்கேயராகக் காணப்பட்டனர்.
- சுதேச வரிமுறைகள் பின்பற்றப்பட்டன.

07. **சமயம்**

- உபசம்பதா விழா நடாத்தப்பட்டது.
- தம்பதெனிய கதிகாவத எழுதப்பட்டது.
- தேவபதிராஜா சமய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தார்.
- இரத்தினபுரி மகாசமன் தேவாலயம் நிர்மானிக்கப்பட்டது.
- கட்டின பூஜைகள் நடாத்தப்பட்டது.

**அரசியல்**

- 1255ல் கலிங்கமாகன் வெற்றி கொள்ளப்பட்டான்.
- 1247, 1261 சந்திரபானுவின் படையெடுப்புக்கள் வெற்றி கொள்ளப்பட்டன.
- தம்பதெனிய இராச்சியம் பலப்படுத்தப்பட்டது.
- நீண்ட அமைதியான ஆட்சி உருவாக்கப்பட்டது.
- இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது.

08. ஆறாம் பராக்கிரமபாகு

- கி.பி 1412 இல் றைகமவுக்கு அரசனானான்
- கி.பி 1415 இல் ஸ்ரீ ஜெயவர்த்தனபுறக் கோட்டையை தலைநகரமாக்கினான்.
- வீதாகமதேரர் போன்றவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டான்.
- சப்புமல் குமரன் எனப்படும் வளர்ப்பு மகனை அனுப்பி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினான்.
- அம்புலுகல குமாரன் எனப்படும் வளர்ப்பு மகனை அனுப்பி கண்டியைக் கைப்பற்றினான்.
- விஜயநகரப் பேரரசுடன் போரிட்டு அதிவீரராம பட்டினத்தைக் கைப்பற்றினான்.
- இலங்கையை இறுதியாக ஒரு குடையின் கீழ் ஆட்சிபுரிந்தான்

09. பொருத்தமான சிறுகுறிப்புகளுக்கு 8 புள்ளிகள் வீதம் வழங்கவும்.